# யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

மாசி 1995 ஆம் ஆண்டுக்கும்

தை 1997 ஆம் ஆண்டுக்கும்

இடைப்பட்ட காலத்திற்கான

# கல்லூரி அதிபரின் அறிக்கை

# யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

## மாசி 1995 ஆம் ஆண்டுக்கும்

## தை 1997 ஆம் ஆண்டுக்கும்

இடைப்பட்ட காலத்திற்கான

# கல்லூரி அதிபரின்

# அறிக்கை

# அதிபர் அறிக்கை

**தைத்**திங்கள் 19ம் நாள் பெப்ரவரி 1ம் திகதி இனிமையான இளங்காலை நேரம் இன்றைய நாள் எமது கல்லூரியின் வரலாற்றிலே முக்கியமான நாள் புதுமையும் மெருகும் பெற பல்வேறு சாதனைகளை நிலைநாட்டிய எமது கல்லூரித்தாய் தனது 34 ஆவது அகவையுள் காலடி எடுத்து வைக்கும் பொன்னாள்.

இந்நன்னாளில் எமது மதிப்பிற்கும் அன்பிற்கும் பாத்திரமான யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியர் வைத்திய கலாநிதி C. சி. நச்சினார்க்கினியன் அவர்கள் பிரதம விருந்தினராக வருகை தந்துள்ளார். அவரது வாழ்க்கைத்துணைவியும் அவருடன் இணைந்து வந்துள்ளமை எமது கல்லூரி மாணவிகளுக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகும் என்று கூறிப் பெருமகிழ்ச்சியடையும் நாம் அவர்களை 'வருக வருக'' என்று வரவேற்கின்றோம்.

இந்நாளில் கௌரவ விருந்தினராக வருகை தந்திருக்கும் சண்டிலிப்பாய்க் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதன் அவர்களே! சிறப்பு விருந்தினராக ஆசியுரை வழங்க வந்திருக்கும் ஓய்வுபெற்ற பொறியியலாளர் திரு. எஸ். பத்மநாதன் அவர்களே! சகோதர பாடசாலை அதிபர் திரு. கேசவராஜன் அவர்களே! நிறுவுனர் நினைவுநாள் பேருரை வழங்க வந்திருக்கும் எமது பாடசாலையின் பழைய மாணவியும், ஓய்வுபெற்ற நூலகருமான செல்வி இ. சுப்பையாபிள்ளை அவர்களே! கல்லூரி அதிபர்களே! பழைய மாணவிகளே! பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே! பெற்றோர்களே! நலன்விரும்பிகளே! உங்கள் யாவருக்கும் ஆசிரியர்கள் - மாணவர் சார்பில் நல்வரவு கூறுகின்றேன்.

எமது கல்லூரித் தினத்தையும், பரிசளிப்பு வைபவத்தையும் கொண்டாடும் முகமாக நாங்கள் அனைவரும் இன்று கூடியிருக்கின்றோம். இந்நந்நாளில் எல்லாம் வல்ல முருகப்பெருமானை நெஞ்சில் நிறுத்தி எமது அறிக்கையை உங்கள்முன் சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.

பேராசிரியர் கலாநிதி நச்சினார்க்கினியன் அவர்களை அறியாதவர்கள் இருக்கமுடியாது. உடல்நலத்துடன் உளநலம் சிறக்க மருத்துவத் துறையின் மாண்புமிகு பேராசானாக விளங்குபவர் பெயருக்கு ஏற்றாற் போன்று ஆளுமை நிறைந்த கனிவான பேச்சு,

ஆழ்ந்த அறிவு, செயல்திறமை, தன்னடக்கம் இவை எல்லாவற்றை யும் விஞ்சும் அனுபவம் இத்தனையும் தன்னகத்தே கொண்ட பெரும் தகை கலாநிதி நச்சினார்க்கினியன் அவர்கள். கற்றது கைமண்ணளவே என்பதைத் தனக்காக்கி தான் கற்ற கல்வியுடன் மட்டும் நின்று விடாது புதியவற்றைத் தேடி மேலும் தனது அறிவை வளர்ப்பதோடு சமூகத்தின் உயர்ச்சிக்கும் அவரவர் நிலையில் இறங்கி பகிர்ந்து கொள்ளும் பண்பாளன். அமெரிக்கா, லண்டன், கனடா, சுவிற்சர் லாந்து என மேலைத்தேச நாடுகளில் மருத்துவத்துறையில் உயர் கல்வியினைப் பெற்று அறிவின் சிகரமாக விளங்கும் இவர் இந்தியா, சீனா போன்ற கீழைத்தேச நாடுகளில் நடைபெற்ற உலக சுகாதார கருத்தரங்குகளிலும் பங்கு பற்றி தனது அறிவை வளர்த்ததோடு மட்டும் நின்றுவிடாது, வடக்கு கிழக்கு மாகாணசபையில் சுகாதார செயலாளராகவும் கடமை ஏற்று எமது பிரதேசத்தின் சுகாதார சேவைகளில் மாபெரும் பணிகளைச் செய்துள்ளார். இவர் தனது ஆரம்பக் கல்வியை பண்டாரவளை செண். ஜோசேப் கல்லூரியிலும் உயர்கல்வியை யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியிலும் மருத்துவக்கல் வியை இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் பெற்றார். மாவட்ட வைத்திய அதிகாரியாகவும் மாவட்ட வைத்திய அத்தியட்சகராக வும் இவரது ஆரம்பகால நற்சேவை வெளிமாவட்டத்திற்கே கிடைக் கலாயிற்று. மருத்துவத்துறையில் நவீன முறைகளையும் அறிவையுந் பெற்ற விற்பன்னராகத் திகழ்ந்தவேளை இவரது சேவை யாழ் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராகப் பணிபுரிந்தார். மிக நெருக்கடியான கால கட்டத்தில் இவரது தன்னலம் கருதாத மனிதாபிமானமான சேவை யாழ் மக்களுக்குக் கிடைத்தது ஒரு வரப்பிரசாதமென்றே கூறலாம். ''காலத்தாற் செய்த நன்றி சிறி தெனினும் ஞானத்தில் மாணப்பெரிது'' என்ற வள்ளுவன் வாக் கினை நினைவுபடுத்த விரும்புகிறேன். மிகத் தேவையான வேளை யில் மனத் தைரியத்துடன் செய்த சேவை மறக்க முடியாதது. இன்று மருத்துவ மாணவர்களின் அறிவுக் கண்களின் ஒளியாக நாம் மிகவும் மதித்துப் போற்றும் கல்விக்கு பணியாற்றியே தீருவேன் என்ற அழுத்தமான உணர்வுடன் போதிக்கும் பேராசானாய் உயர்ந்து நிற்கின்றார். இத்தகைய செயல்வீரனே! தங்களது கடமை உணர்வு எமது சமூகத்திற்கும் மாணவ சமூகத்திற்கும் மாபெரும் உதவி என் பதை இத்தருணத்தில் நினைவு படுத்தி தங்களை வாழ்த்துகிறோம்; வரவேற்கிறோம்.

திருமதி நச்சினார்க்கினியன் அவர்களே! மனைத்தக்க மாண்புகள் மலியப்பெற்ற தாங்கள் எம் மாணவச் செல்வங்களுக்கு பரிசில்களை வழங்குவது மிகவும் சாலப் பொருத்தமுடையதாகும். தங்களை இன்முகம் காட்டி வரவேற்கின்றோம்.

சண்டிலிப்பாயின் உதவிக் கல்விப் பணிமனையின் பொறுப்பினை ஏற்ற எம் பிரதிக் கல்விப் பணிப்பாளராக விளங்கும் திருமதி றே. இருதயநாதன் அவர்களே! தங்களின் அமைதி, அடக்கம், சேவை மனப்பாங்கு கடமையுணர்வு செயற்திறன் என்பவற்றிற்கு தங்களின் கடந்த கால சேவைகள் சான்று பகரும். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உடைய தாங்கள் எமது கோட்டத்தின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வருகிறீர்கள் என்பது நாம் அறிந்ததே. எமது கல்லூரி இப்பகுதியில் பெண்களுக்கென தனித்துவமான கல்லூரியாகத் திகழவேண்டும் என்னும் ஆவலுடன் அதன் முன்னேற்றப் பாதையின் தேவைகளை உணர்ந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்து அதன் உயர்ச்சியைப் பெருவிருப்புடன் நோக்கும் தங்களை அகமும் முகமும் மலர வரவேற்கின்றோம்.

எமது கல்லூரி நலனில் அக்கறை கொண்ட நலன்விரும்பி திரு. எஸ். பத்மநாதன் அவர்களே! கல்லூரி எந்த நிகழ்விலும் நல்லதொரு ஆலோசனையை வழங்கும் ஆலோசகராய், நண்பராய் விளங்கி வழிகாட்டும் தங்களை அன்புடன் வரவேற்கின்றோம்.

எமது கல்லூரியை வாழ்த்தி ஆசியுரை வழங்க வந்திருக்கும் சகோதர பாடசாலை அதிபர் திரு. எஸ். கேசவராஜன் அவர்களே! தாங்கள் என்றும் எம் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர். என்றும் எமக்கு வழிகாட்டி, எம்மை ஊக்குவித்து உற்சாகப்படுத்தும் தங்களை மனம் மகிழ வரவேற்கின்றோம்.

இக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்ட காலந்தொட்டு இக்கல்லூரியின் சகோதர பாடசாலை நூலகராக இருந்ததோடு மட்டுமல்லாது, ஸ்தாபிதம் செய்தவர்களுடன் நெருங்கிப் பழகிய பேற்றையும் பெற்றுள்ள முன்னாள் சிரேஷ்ட நூலகர் செல்வி ஆர். சுப்பையாபிள்ளை அவர்களே! உங்கள் தாய்வீடு போன்ற எங்கள் கல்லூரி வளர்ச்சியில் தாங்கள் என்றும் அக்கறையுள்ளவர்.

கனிவான பேச்சாலும் எதையும் எண்ணித் துணியும் செயலாலும் பொறுமையாலும் ஆசிரியர் குழாத்திடமும் மாணவர் குழாத்திடமும் நன்மதிப்பைப் பெற்றுள்ளீர்கள். தாங்கள் எமது கல்லூரியின் பழைய மாணவி என்ற நிலையிலிருந்து, எமக்கு வழங்கிவரும் அரிய ஆலோசனைகள் எமக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தினையும் அளித்து கல்லூரியின் உயர்ச்சிக்கு உதவுகின்றது! இத்தகைய தங்களின் ஊக்கமும் ஆக்கமும் எமது கல்லூரிக்குத்தொடர்ந்து கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இவ்வேளையில் தங்களை மனம் உவந்து அன்புடன் வரவேற்கின்றோம்.

நாட்டின் சீரற்ற சூழ்நிலையில் சிறப்பான கல்வியையும் உரிமைகளையும் வேண்டி நிற்கும் நாம் எமது கடமைகளை மறக்க முடியாது. ஆசிரியர்களிடமிருந்து நமது சமூகம் பலவற்றினை எதிர்பார்த்துக் கையேந்தி நிற்கின்றது. எமது சேவை நல்லதொரு மாணவியை, நல்லதொரு தலைவியை உருவாக்க வேண்டும் ஆசிரிய. ஆசிரியைகளே! ''எமது கடன் பணிசெய்து கிடப்பதுவே'' என்பதனை நினைவூட்ட விரும்புகின்றேன்.

எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு பல்வேறு தேவைகள் உள்ளன அவற்றினை உணர்ந்து உதவிவருகின்ற பழைய மாணவிகள் சங்க அங்கத்தவர்களுக்கும் தேவைகளைப் பூர்த்தி செய்ய தம்மாலியன்ற முறையில் செயல்திட்டம் வகுத்து செயற்படுத்தும் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கும் காலம் கருதி சேவை வழங்கும் நம் அன்பிற்குரிய பெற்றோர்களுக்கும் நலன்விரும்பிகளுக்கும் நன்றி கூறுவதில் மகிழ்வெய்துகிறோம்.

வளமான வாழ்விற்கு உயர்வான கல்விபெற எம்மை நாடிவந்த மாணவச் செல்வங்களே! மனநிற்கினிய மாணவப் பருவத்தினை கேடான நோக்கோடு வீணாக்க முடியாது. காலத்தைக் கண்ணெனக்கருதி கடமை உணர்வோடு வாழப் பழக வேண்டும் முழுமையான மனிதனாக பரிணமிக்க முயல வேண்டும். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நீதி, நேர்மை உங்களால் பூஜிக்கப்பட வேண்டும். மாணவச் செல்வங்களே! பரிவுடனும் பண்புடனும் உழைக்கும் ஆசிரியப் பெருந்தகைகளுடன் இணைந்து இக்கல்லூரியினை வெற்றிப்பாதையில் இட்டுச்செல்வது உங்கள் அனைவரினதும் கடமையாகும்.

## கல்லூரி வரலாறு

மானிப்பாயில் அடங்கியுள்ள கிராமங்களில் உள்ள பெண் பிள்ளைகள் படிப்பதற்கு வசதியான சைவப்பாடசாலை இல்லையென்பதுவும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பெண்களைச் சேர்ப்பதற்கு எடுத்த முயற்சிக்கு ஒரு காரணமாகும். அன்றைய அதிபர் திரு V.வீரசிங்கம் அவர்கள் கல்லூரி முகாமையாளரின் அனுசரணையுடன் 1944ம் ஆண்டு தை மாதம் பெண் பிள்ளைகளை கல்லூரியில் சேர்த்தார். அவ்வருடம் 4ம், 5ம் வகுப்புகளில் மாத்திரம் பிள்ளைகள் சேர்க்கப்பட்டனர் பின் படிப்படியாக உயர்தர வகுப்புக்கள் வரை பெண் பிள்ளைகள் பெரும் தொகையில் சேர்ந்ததினால் அவர்களுக்கென தனியான ஒரு பிரிவு தொடங்க வேண்டும் என்னும் அபிப்பிராயம் வலுப்பெற்றது. இதற்கு அன்றைய உபஅதிபர் திரு முத்துவேற்பிள்ளையின் தூண்டுதல் பெரும் துணை புரிந்தது. 1951ல்

திரு. C. நவரட்ணம் அவர்கள் அதிபராகப் பதவி பெற்றதும் திரு சு. முத்துவேற்பிள்ளை அவர்கள் 1952இல் உப அதிபராகியதும் பழைய மாணவர் சங்கம் வேகமாகச் செயற்படத் தொடங்கி 1952ஆம் ஆண்டு திருமதி. பட்டம்மாளின் இசைக்கச்சேரி மூலம் கிடைத்த பணத்தில் பெரும்பகுதியை மூலதனமாகக் கொண்டு பெண்கள் பகுதிக்கான இருமாடிக் கட்டிடத்தின் கீழ்த்தளம் அமைக்கப்பட்டது. பணம் போதாத காரணத்தால் 1955இல் யாழ் நகரில் நடைபெற்ற களியாட்டம் மூலமும் பின்னர் 1960இல் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற களியாட்டம் மூலமும் கிடைத்த பண உதவியுடன் கட்டிடம் பூர்த்தியாக்கப்பட்டது.

இக்கால கட்டத்தில் பழைய மாணவர் சங்கத்தலைவர் திரு. C. நவரட்ணம், செயலாளர்களாகப் பணியாற்றிய திரு.பொ செல்வரட்ணம் திரு. C S. நவரட்ணம் மற்றும் திருவாளர்கள் S. T. சாரி, R. சிவதாசன். இராமலிங்கம், பொருளாளர் சிவா முத்துக்குமாரசாமி, வைத்திய கலாநிதி ச. சோமசுந்தரம் ஆகியோரின் இடையறா முயற்சியும் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. இக்காலப் பகுதியில் கல்லூரியின் கட்டிட அமைப்பினை தரமான கட்டமைப்பான ஒழுங்கிற்கு அமைய மேற்பார்வை செய்து உதவிய திரு. தியாகராஜா அவர்களது இன்றைய நிலையில் கல்லூரி பல்வேறு வழிகளிலும் முன்னேற்றம் காண பக்கபலமாக நின்றுழைக்கும் ஓய்வு பெற்ற பொறியியலாளர் திரு. எஸ். பத்மநாதன் அவர்களினதும் இன்றைய இளந்தலைமுறையினரது பணியும் இக்கல்லூரி வளர்ச்சிக்குக் காரணமாக அமைகிறது.

## மாணவர் தொகை

தற்போது எமது கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்தொகை 524 ஆகும். ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 8 வரை 117 மாணவர்களும், ஆண்டு 9 தொடக்கம் ஆண்டு 11 வரை 232 மாணவர்களும், ஆண்டு 12 தொடக்கம் ஆண்டு 13 வரை 144 மாணவர்களும் கல்வி கற்கின்றனர். கடந்த ஆண்டில் இடம் பெயர்விற்குப் பின்னர் மாணவர் தொகையில் 50% வீழ்ச்சி ஏற்பட்டது என்பதை மிக மனவருத்தத்துடன் தெரிவிக்கின்றேன்.

## ஆசிரியர் குழாம்:

இப்பொழுது எமது கல்லூரியில் 27 நிரந்தர ஆசிரியர்களும், 07 தொண்டர் ஆசிரியர்களும் கடமையாற்றுகின்றனர்.

திருமதி M உதயகுமாரன் B A. (Hons) Dip. in Edu.
திருமதி M. செல்வராஜா B. Sc. Dip. in Ed
திருமதி R. செல்வநாதன் (பயிற்றப்பட்ட ஆசிரியர்-கணிதம்)
செல்வி M. கணபதிப்பிள்ளை B. A. (SPC)
திருமதி N விஜயசுந்தரம் (பயிற்றப்பட்ட ஆசிரியர்-கணிதம்)
திரு K. இராமானுந்தசிவம் B Com.

ஆகியோர் தமது சொந்த நலன்கருதி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். அவர்கள் ஆற்றிய நற்பணியை நினைவு கூர்ந்து நன்றி செலுத்துகின்றோம் சென்ற இடமெல்லாம் வெற்றிபெற வாழ்த்துகிறோம்.

பட்டதாரி ஆசிரியர்களான திரு. S. சிவவீரசிங்கம், திருமதி M. செல்வரட்ணம், திருமதி P. கதிர்காமநாதன், திருமதி S. விநாயகமூர்த்தி பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர் திரு. A. விஜயரட்ணம் ஆகியோர் இக்கல்லூரியில் சிறந்த ஆசிரியர்களாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்றுள்ளனர். செயல் திறனும் கடமையுணர்ச்சியும் கொண்டு இவர்கள் கல்லூரிக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டுவதோடு இவர்களுக்கு எல்லா நலன்களையும் அருள இறைவனை வேண்டுகின்றேன்.

திருமதி A. இரவீந்திரன் தனது சுகயீனம் காரணமாக விடுமுறையில் கொழும்பு சென்றுள்ளார். இவரின் நோய் குணப்பட்டு சுகதேகியாக எமது கல்லூரியில் மீண்டும் சேவையைத் தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

செல்வி K. சின்னராஜா B. A., ~~ஆசிரியர்களான~~ திரு. S. குகேஸ்வரராஜா B. com திரு. T. தர்மசீலன் கணிதம் (பயிற்றப்பட்ட ஆசிரியர்) இடம்பெயர்ந்த காரணத்தினால் தற்காலிக இடமாற்றம் பெற்று சேவையாற்றுகின்றனர்.

திருமதி P. சர்வானந்தா B A., செல்வி U. ஆறுமுகம் B. A. ஆகியோர் தற்காலிக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர் இடம்பெயர்வின் காரணமாக மாணவர் தொகை குறைவடைந்தமையே இதற்குக் காரணம் மாணவர் தொகை அதிகரிக்கவும், இவர்கள் மீண்டும் எமது கல்லூரியில் சேவையைத் தொடரவேண்டும் என்பதே எனது ஆவல்.

1995 தை மாதத்திற்குப் பின்னர் எமது கல்லூரிக்கு திறமையும் கடமையுணர்ச்சியுமுடைய ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்று வந்துள்ளனர். செல்வி G. தம்பாப்பிள்ளை B. A , திருமதி C. அமிர்தலிங்கம் B A Dip-in-Ed.. செல்வி G. நடராஜா கணிதம் (பயிற்றப்

பட்ட ஆசிரியர்) திருமதி T. நாகேந்திரா (விஞ்ஞானம்) பயிற்றப் பட்ட ஆசிரியர்) ஆகியோர் இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியர் களாவர். தற்காலிக இடமாற்றம் பெற்று திருமதி V. ஜெய சீலன் B C S, திருமதி T. சிறிஸ்கந்தராஜா B com ஆகியோர் எமது கல்லூரிக்கு வந்துள்ளனர். இவர்களையும் நாம் வரவேற் கின்றோம். அவர்கள் சேவை இங்கு சிறப்புற வாழ்த்துகின்றோம். மேலும் ஒப்பந்த அடிப்படையில் செல்வி M. செல்லத்துரை ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றுகிறார் இவரது நற்சேவை நாளும் தொடர வாழ்த்தி வரவேற்கின்றோம்.

## தொண்டர் சேவை

அவ்வப்போது நிலவிய ஆசிரிய பற்றாக்குறையை நீக்கும் வகை யில் செல்வி K. ஜயந்தா விலங்கியல் ஆசிரியையாகவும், செல்வி A சுபாஜினி கத்தோலிக்க சமய ஆசிரியையாகவும், செல்வி S. கௌசி அளவையியல் ஆசிரியையாகவும், செல்வி S. அகல்யா இந்து நாகரிக ஆசிரியையாகவும் செல்வி. வனஜா நடன ஆசிரியராகவும் திரு. செந்தில்வேல் சித்திர ஆசிரியராகவும் சேவையாற்றி வருகின் றனர். இடப்பெயர்வின் காரணமாக லிகிதர் இல்லாக்குறை ஏற் பட்டபோது அதனை நிவிர்த்தி செய்ய பாடசாலையின் பழைய மாணவி செல்வி M. லிங்கேஸ்வரி லிகிதராகவும் செல்வி. நளாயினி துவிச்சக்கர வண்டிகளைப் பாதுகாக்கும் காவலராகவும் சேவையாற் றுகின்றனர். இவர்களது சேவையும் எதிர்காலமும் சிறப்படைய வாழ்த்தி வரவேற்கின்றேன். மற்றும் கல்லூரி செயற்பாட்டில் உத வியும் ஒத்தாசையுமாக இருந்துவரும் சிற்றூழியர்களுக்கும் எமது பாராட்டுகள்.

## ஞாபகார்த்தம்

எமது கல்லூரியின் பழைய மாணவிகள் சங்க போஷகர் திரு.சிவா இராஜேந்திரன் அவர்கள் 1996 மாசி மாதம் இறைபதம் அடைந் தார். இவரது சேவையை என்றும் நன்றியுடன் நினைவு கூர்ந்து அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து அஞ்சலி செலுத்து கின்றோம்.

## பரீட்சைப் பெறுபேறுகள்

க. பொ. த. (சா. த.) டிசம்பர் 1995 (விசேட பரீட்சை ஜூலை 1996)

| | |
|---|---|
| பரீட்சைக்குத் தோற்றியோர் தொகை | 71 |
| சித்தியடைந்தோர் தொகை | 63 |

அதிகூடிய பெறுபேற்றைப் பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஜெயந்தி அருளையா | 6 D |
| 2 | சுஜிதா தணிகாசலம் | 6 D |
| 3. | சுபாசினி ஜேசுதாசன் | 5 D |
| 4. | பிரியதரிசினி கணேசராஜா | 5 D |

பழைய மாணவர்கள் சங்கம் சார்பாக இராமநாதன் புலமைப் பரிசில் 1994ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படுகிறது இதற்குரிய முதற் புலமைப் பரிசிலை 1994ஆம் ஆண்டு அதிவிசேட சித்தியைப் பெற்ற செல்வி ஜராங்கனி யோகராசா பெறுகின்றார். அதைத் தொடர்ந்து செல்விகள் ஜெயந்தி, அருளையா, சுஜிதா, தணிகாசலம் பெறுகின்றனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்,

க. பொ. த (உ த.) செப்டம்பர் 1995

| | | |
|---|---|---|
| பரீட்சைக்குத் தோற்றியோர் தொகை | | 114 |
| பல்கலைக்கழகம் செல்ல தகுதி பெற்றோர் தொகை | | 74 |
| | விஞ்ஞானம் | 08 |
| | வர்த்தகம் | 28 |
| | கலை | 38 |

க பொ. த. உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் 100%ம் வர்த்தகப்பிரிவில் 88%உம், விஞ்ஞானத்தில் 50% பல்கலைக்கழகம் செல்ல அடிப்படைத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களுள் பல்கலைக் கழக வெட்டுப்புள்ளிக்கு அமைவாக பின்வருவோர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

| | | |
|---|---|---|
| சிவதர்சினி | சதாசிவம் | விவசாய விஞ்ஞானம் |
| சுதர்சினி | யோகரட்ணம் | விவசாய விஞ்ஞானம் |
| தர்சினி | மகேந்திரன் | பௌதிக விஞ்ஞானம் |
| சீபதர்சினி | ஆரோக்கியநாதன் | முகாமைத்துவம் II |
| சுகந்தியா | கந்தசாமி | சட்டம் |
| ஜெசாத்ரூபி | நடேசு | வர்த்தகம் |
| ரஜித்தா | நாகராஜா | வர்த்தகம் |
| மலர்விழி | பரமானந்தன் | கலை |
| பாமினி | சின்னத்துரை | கலை |
| கோமதி | நடராஜா | கலை |
| விஜித்தா | தர்மசேகரம் | கலை |
| நிர்மலா | துரைசிங்கம் | கலை |
| மேரிகொன்செப்ரா | ஜெயபாலன் | கலை |

| | | |
|---|---|---|
| ஜாமினி | மகாதேவன் | கலை |
| ஹேமலோஜினி | கனகரட்ணம் | கலை |

இம்மாணவிகளையும் இவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டுவதுடன் பெருமையடைகிறேன்.

## மாணவ மன்றங்கள்:-

### ஆங்கில மன்றம்

இம்மன்றம் ஆங்கில மொழித் திறனை வளர்க்கும் நோக்குடன் சிறப்பாக இயங்குகின்றது. பாடசாலை மட்டத்தில் ஆங்கில தின விழா இம் மன்றத்தினால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பாடசாலை ரீதியாகவும், கோட்ட மாவட்ட ரீதியாகவும் நடைபெறும் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார் செய்து வெற்றி பெறுவதற்கு உழைத்து வருகின்றது. ஆங்கில தினப் போட்டியில் கோட்ட மட்டத்தில் 68 நிகழ்வுகளில் 1-ம் இடத்தை 20 மாணவிகளும் 2-ம் இடத்தை 18 மாணவிகளும், 3-ம் இடத்தை 11 மாணவிகளுமாக, மொத்தம் 49 இடங்களைப் பெற்று பாடசாலைக்கும், கோட்டத்திற்கும் பெருமை தேடித் தந்துள்ளனர். இவர்களில் 1-ம் இடத்தைப் பெற்ற 20 மாணவிகளும் மாவட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர். இம்மாணவிகளுக்கும் அவர்களைச் சிறப்பாக வழி நடத்திய ஆங்கிலப் பாடப் பொறுப்பாசிரியர் திருமதி எஸ் பாலசுப்பிரமணியம், ஏனைய ஆங்கில ஆசிரியர்களான செல்வி எம். செல்லத்துரை, செல்வி எம் லோறன்ஸ் ஆகியோருக்கும் எனது பாராட்டுக்கள்.

## தமிழ் மன்றம்

இம்மன்றம் தமிழ்மொழி வளத்தை வளர்க்கவும் இலைமறை காயாக இருக்கும் மாணவர் திறமைகளை வெளிக்கொணரும் நோக்கமாகவும் செயற்பட்டு வருகின்றது. இதன் முக்கிய செயற்பாடாக கையெழுத்து சஞ்சிகை ஆண்டுதோறும் வெளியிடப்படுகின்றது பாடசாலை கோட்ட மட்ட தமிழ் மொழித்திறன் விழாவில் நடத்தப்பட்ட போட்டிகளில் 9 நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய மாணவிகளில் 1 ம் இடத்தை 4 மாணவிகளும், 2-ம் இடத்தை 3 மாணவிகளும், 3-ம் இடத்தை 1 மாணவியுமாக எட்டு இடங்களைப்பெற்று பெருமை தேடித் தந்துள்ளனர். சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஊனமுற்றோர் தினப் போட்டியில் கட்டுரை: 3-ம் இடத்தை

செல்வி பே. பபித்தாவும், பேச்சு. 3-ம் இடத்தை செல்வி ரி. உஷா நந்தினியும் பெற்றுள்ளனர். இம்மன்றம் மாதமொருமுறை கூட்டப் பட்டு மாணவிகளின் தலைமைத்துவப்பண்பு, பேச்சாற்றல் ஆக்க முயற்சிகள் போன்றன வளர்க்கப்படுகின்றன. இம்மன்றம் சிறப்பாக இயங்கப் பொறுப்பாக இருக்கும் பொறுப்பாசிரியர் திருமதி பி. விஜயகாந்தன் அவர்களுக்கும் ஏனைய தமிழ்ப்பாட ஆசிரியர்களுக் கும் தமிழ்மன்றத் தலைவர் கே. அமிர்தா, செயலாளர் செல்வி கே நந்தினி அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

## விஞ்ஞான மன்றம்

இம்மன்றமானது மாதந்தோறும் புதன்கிழமைகளில் கூட்டப் பட்டு மாணவரிடையே அறிவு, ஆற்றல், ஆளுமையை வளர்ப்பதற் கான வினாடிவினாப் போட்டிகள் விழுந்தமான பேச்சுப் போட்டி கள், கட்டுரைப் போட்டிகள், நவீன தொழில்நுட்ப சாதன அறி முகம் போன்ற பல நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றன இவ்வறிக் கைக் காலப்பகுதியில் 1995ம் ஆண்டுக்கான 'சங்கேதம்' சஞ்சிகை வெளியிடப்பட்டது. 1996ம் ஆண்டுக்கான வெளியீடு தடைப்பட்டு இருந்தாலும் இவ்வருடம் சஞ்சிகை வெளியிடுவதற்கான ஆயத்தங் கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை பெருமையுடன் கூறிக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம். இம் மன்றத்தின் ஆக்க பூர்வமான செயற்பாட்டினை க. பொ. த உயர்தர, சாதாரண முடிவுகள் எடுத்துக்காட்டியுள்ளன என்பதையும் கோட்டமட்ட விஞ் ஞானப் போட்டியில் 9 இடங்களைப் பெற்றுள்ளனர் என்பதையும் நான் பெருமையுடன் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வாறாக இம்மன்றம் சிறப்புற இயங்க உழைத்து வரும் பொறுப்பாசிரியர் திரு எ இளங்கோ அவர்களுக்கும் ஏனைய விஞ்ஞான ஆசிரியர் களான திரு. கே. புஸ்பநாதன், திரு கே. கலைநேசன், திருமதி. ஜி. சிவராஜசுந்தரம், திருமதி ரி. நாகேந்திரா ஆகியோருக்கும் எனது பாராட்டுக்கள்.

## வணிக மன்றம்

இம்மன்றம் உயர்தர வகுப்பு மாணவிகளின் வர்த்தகக் கல்வி மேம்பாட்டிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவருகின்றது. இம்மன்றம் உருவாகி 8 வருடங்கள் ஆகின்றன. இக்காலப் பகுதியில் ஆண்டு தோறும் வணிக விழா மூலம் வணிகப் போட்டிகளில் வெற்றி பெற் றோருக்கு பரிசில்கள் வழங்கி கௌரவித்து வருகின்றது. கருத்தரங்கு கள், வணிகப் பலகை, மன்றக் கூட்டங்கள் மூலம் வணிகக் கல்வி சம்பந்தமான தகவல்களை மாணவர்கள் பெற உதவிவருகின்றது.

1995-ம் ஆண்டு இம்மன்றம் பல்வேறு இன்னல்களுக்கும் மத்தியிலும் தன் கன்னி மலரான 'வணிகச் சோலை' என்னும் சஞ்சிகையை வெளியிட்டு மன்றத்துக்கும், மாணவர்களுக்கும் பெருமை சேர்த்தது, இத்தகைய செயற்திறத்துடன் இம்மன்றம் இயங்கக் காரணமாயிருந்த பொறுப்பாசிரியர் திரு. ஆர். வசந்தகுமார், திருமதி வி. சற்குண ரெட்ணம் அவர்களுக்கும் ஏனைய வணிக மன்ற ஆசிரியர்களுக்கும் மன்றத் தலைவி பி. அகிலா, செயலாளர் செல்வி இ. மந்தாகினி ஆகியோருக்கும் எனது மனமுவந்த பாராட்டுக்கள்.

## இந்துமாமன்றம்

இக்கல்லூரியில் நிகழும் சைவசமய வைபவங்களை இம்மன்றம் சிறப்பாகச் செயற்படுத்தி வருகிறது. கல்லூரி முன்றலில் அமைந்திருக்கும் முருகன் ஆலய நித்தியபூசை, வருடாந்த அபிஷேகம், மணவாளக்கோலம், திருக்கல்யாணம், நவராத்திரிவிழா ஆகிய விசேட சமய நிகழ்ச்சிகளை இம்மன்றம் செயற்படுத்தி வருகிறது: இவற்றுடன் சமயச் சொற்பொழிவுகளை விசேட சமய தினங்களில் நிகழ்த்தி மாணவர் நன்னெறிக்கு வழிகாட்டி வருகிறது. இச்சமய நிகழ்வுகளைப் பொறுப்புடன் நடத்திவரும் பொறுப்பாசிரியர்களான திருமதி டி. சுந்தரலிங்கம் மற்றும் துணையாசிரியர் ஜி. நடராசா அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள். மற்றும் எமது ஆலய கும்பாபிஷேகத்திற்கு பின்வருவோர் நிதியுதவியளித்துள்ளனர்; ஷியானி, பிரேமினி - மயில்வாகனம் 7230/-. மஸ்க்கன் - 10000/- திரு. வேதராஜா - 5000/- திருமதி வி. முத்துக்குமாரசாமி 500/- திருமதி டி. முத்துவேற்பிள்ளை 1000/- திரு. பூரணலிங்கம் 1000/- திருமதி. வைரமுத்து 1000/ - திருமதி எம். செல்வரட்ணம் 1000/- திருமதி எஸ். பாலசுப்பிரமணியம் 500/- திருமதி சிவனேஸ்வரன் 2000/- திருமதி புஸ்பராணி 2000/- ரூபாவையும் தந்துதவியுள்ளனர் இவர்களது மனமுவந்த அன்பளிப்பு எமது கல்லூரியில் கொண்டுள்ள பற்றினையே வெளிக்காட்டி நிற்கிறது. இவர்களுக்கு எமது மனமுவந்த நன்றியும் மகிழ்ச்சியும் உரித்தாகுக. இப்பாடப் பொறுப்பாசிரியர் செல்வி ரி. இராஜரட்ணம் அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

## உயர்தர மாணவ மன்றம்

இம்மன்றம் வாரம்தோறும் ஒவ்வொரு புதன்கிழமையும் கூட்டப்பட்டு மாணவிகளின் ஆக்கத் திறன்களையும் விசேட ஆற்றல்களையும் பல்வேறு செயற்பாடுகளினூடாக வெளிப்படுத்தி விசையூட்டி வருவதுடன் வருடாந்த ஒன்றுகூடலையும் நடத்தி வருகின்றது.

1996-ம் ஆண்டுக்கான ஒன்றுகூடல் எமது பிரதேச நிலைதளர்வினால் நடைபெறமுடியவில்லை. ஆனாலும் மன்றத்தின் ஏனைய செயற்பாடுகள் யாவும் புதுமெருகும் புதுப்பொலிவும் கொண்டு செயற்பட்டு வருகின்றன. இம்மன்ற வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துவரும் பொறுப்பாசிரியர் திரு. ரி. சுப்பிரமணியம் அவர்களையும் ஏனைய உயர்வகுப்பு ஆசிரியர்களையும் நான் பாராட்டுகிறேன்.

## கத்தோலிக்க மன்றம்

மாணவிகள் மாண்புறு கல்விதனைப் பெறவேண்டும் என்னும் நோக்கோடு இயங்கும் இக்கல்லூரியில் பிற மத மாணவிகளும் கல்வி பயில்கின்றனா என்பதில் பெருமையடைகின்றேன். கத்தோலிக்க மன்றம் சார்பாக யாழ். மறை மாவட்டத் திருவழிபாட்டு வினாவிடைப் போட்டிகளில் பங்கு பற்றி மறையறிவை வளர்த்ததோடு பரிசில்களையும் பெற்றுள்ளனர். அத்தோடு அவர்களால் கல்லூரியில் நிகழ்த்தப்பட்ட ஒளிவிழாவும் எல்லோரது பாராட்டினையும் பெற்றது. இம்மன்றம் சிறப்புற இயங்க ஆதரவாக இருக்கும் ஆசிரியர்களான திருமதி M. T. ஞானப்பிரகாசம், M. J. லோறன்ஸ், திருமதி V. ஜெயசீலன், செல்வி ஆன். சுபாஷினி ஆகியோருக்கும் எனது பாராட்டுக்கள்.

## தொழில் நுட்பக் கழகம்

எமது தொழில் நுட்பக் கழகத்தில் வாழ்க்கைத்திறன், மனையியல், வர்த்தகம் முதலிய பாடநெறிகள் அடங்குகின்றன. இப்பாடநெறிகள் மூலம் பல கைத்திறன் அபிவிருத்திப் பயிற்சி, சுயதேவை ஆக்க முயற்சி போன்ற பெண்களுக்குகந்த பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. இது எமது மாணவிகளின் எதிர்காலத்தை நல்ல நெறியிற் செல்ல வழி அமைக்கும். இந்நெறிக்குப் பொறுப்பாக இருந்து புகட்டிவரும் பொறுப்பாசிரியர்களான திருமதி M. திருஞானசம்பந்தன், திருமதி S. ஜெயந்திக்குமார் அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

## அழகியற் கலைகள்

எமது கல்லூரியின் இசை நடன நாடகக்குழு சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. இக்கவின் கலைகள் (க. பொ. த) உ. த பாடங்களாகக் கருதப்பட்டு வருகின்றன. இவ்வறிக்கை காலப்பகுதியில் நடைபெற்ற கர்நாடக சங்கீதப் போட்டியில் குழு 1ம் இடத்தையும்

சிரேஷ்ட இடைநிலைக்குழு 1ஆம் இடத்தையும் கனிஷ்ட இடைநிலைக் குழு 2ஆம் இடத்தையும் பெற்றுள்ளது. கோட்டமட்டப் பா ஒதல் கனிஷ்ட இடைநிலையில் தனுஜா சிதம்பரநாதன் 1ஆம் இடத்தையும் சிரேஷ்ட இடை நிலையில் சிவறூபி ஸ்ரீஜெகநாதன் 2ஆம் இடத்தை யும் மேற்பிரிவில் ஹேமலதா ஞானானந்தன் 1ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். உப கோட்ட மட்ட நடனப் போட்டியில் ஆக்க நடனம் சிரேஷ்ட இடைநிலைக்குழு 1ஆம் இடத்தையும் சாஸ்திரிய நடன சிரேஷ்ட இடைநிலைக்குழு தனி 1ஆம் இடத்தையும் ஆக்கநட னம் மேற்பிரிவு 1ஆம் இடத்தையும் பெற்றது. மாவட்ட மட்டத்தில் ஆக்கநடனம் மேற்பிரிவு 1ஆம் இடத்தையும் பெற்றது எமது கல்லூ ரியில் நடன ஆசிரியை இல்லாதபோதும் அப்பணியை கல்லூரி ஆசி ரியை செல்வி விமலா இராஜதுரை நிறைவு செய்து வருகின்றார். அவரது முயற்சியின் பயனாக தமிழ்த்தினப்போட்டியில் மாவட்ட மட்டத்தில் எமது கல்லூரி மாணவிகள் வெற்றியீட்டியுள்ளனர் என் பதை பெருமையுடன் கூறுவதுடன் இயல், இசை, நாடகம் மூன்றிற் கும் உழைத்துவரும் பொறுப்பாசிரியர்களான திருமதி D.சுந்தரலிங்கம் செல்வி ஸ்ரீ. கணேஸ்பரன் செல்வி வி. ராஜதுரை, திருமதி ஷ. ஸ்ரீ கந்தவேள் ஆகியோருக்கு எனது பாராட்டுகள்.

மற்றும் அமரர் சிவா இராஜேந்திரன் அவர்களின் திருவுருவப் படத்தை குறுகிய காலவேளையில் நிஜமான நிழற்படமாக்கி அஞ்சலி நிகழ்வு செய்ய உதவிபுரிந்த எமது கல்லூரியில் சித்திரப்பாட தொண் டர் ஆசிரியர் திரு. செந்தில்வேல் அவர்களுக்கு எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## விளையாட்டு நிகழ்வு

1995இல் வழமை போல் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி நடைபெற்றது. 1996ல் இது சாத்தியமற்ற சூழ்நிலையால் நடைபெறவில்லை இந்த அறிக்கைக் காலப்பகுதியில் (1996) யாழ். மாவட்ட மெய்வல்லுனர் போட்டியில் எமது கல்லூரி மாணவிகள் பங்கு பற்றி முதன்மை வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டுள் ளனர் கோட்டமட்ட உடற்பயிற்சிப் போட்டியில் 19வயதுப் பிரிவு 1ஆம் இடத்தையும் 17வயதுப் பிரிவு 3ஆம் இடத்தையும் பெற்றது. கோட்டமட்ட வலைப்பந்தாட்ட போட்டியில் 19வயதுப் பிரிவு 2ஆம் இடத்தையும் 17வயதுப்பிரிவு 2ஆம் இடத்தையும் பெற்றது சண்டி லிப்பாய் கோட்டமட்ட மெய்வல்லுனர் போட்டியில் 19 வயது முதன்மை வீராங்கனைகளாக றொபினி, சகிலா, பிறேமதாஸ், வைதேகி, சோமேஸ்வரானந்தம் தெரிவு செய்யப்பட்டனர். 17வயது முதன்மை வீராங்கனைகளாக மாதினி, இராஜசூரியர், கிருஷ்ண

வேணி பரமநாதன் தெரிவு செய்யப்பட்டனர். 15 வயது முதன்மை வீராங்கனையாக றெஜினா றொபின்சன் தெரிவு செய்யப்பட்டார். சண்டிலிப்பாய் கோட்ட அஞ்சலோட்ட வெற்றிக் கிண்ணத்தையும் எமது கல்லூரியே தட்டிக்கொண்டது. உபகோட்டமட்ட மெய்வல்லுனர் போட்டியில் 19வயது முதன்மை வீராங்கனையாக றெபினி சகிலா, பிறேமதாசும் 17வயது முதன்மை வீராங்கனையாக மாதினி இராஜசூரியரும் தெரிவு செய்யப்பட்டனர் வலயம் இரண்டிற்கான மெய்வல்லுனர் போட்டியில் 17வயது முதன்மை வீராங்கனையாக மாதினி இராஜசூரியர் தெரிவுசெய்யப்பட்டார். இவர் உயரம் பாய்தலில் 1ஆம் இடத்தைப் பெற்றார். 19வயதுக்குட்பட்ட பிழுவில் சிவலோஜினி அருளானந்தம் ஈட்டி எறிதலில் 2ஆம் இடத்தையும், சிவ நயனி பசுபதிப்பிள்ளை குண்டெறிதலில் 3ஆம் இடத்தையும் பெற்றனர். அஞ்சல் ஓட்டப்போட்டியில் 19வயதுக்குட்பட்டோர் 3ஆம் இடத்தையும் 17 வயதுக்குட்பட்டோர் 3ம் இடத்தையும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர் இவ்வாறு விளையாட்டுத்துறை சிறந்து விளங்க ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர்களான திருமதி எம். ரி ஞானப்பிரகாசம் செல்வி. வல்லிபுரம் ஆகியோருக்கு எனது பாராட்டுக்கள்

## மாணவ முதல்வர் சபை

இவர்கள் கல்லூரியின் பாரம்பரியம், கட்டுப்பாடு, ஒழுங்கு ஆகியவற்றைப் பேணிப் பாதுகாத்து வளர்த்து வருவதில் நிர்வாகத்திற்குப் பேருதவி நல்கி வருகின்றனர். இவர்களுக்கு வழிகாட்டி, ஆலோசனைகளை எனது தலைமையின் கீழ் இயங்கும் ஆசிரியர் ஒழுங்காற்றுக்குழு வழங்கி வருகின்றது. இவர்கள் அனைவருக்கும் எனது நன்றி.

## ஆசிரியர் நலன்புரிக் கழகம்

எமது ஆசிரியர் கழகம் ஆசிரியர்களின் நலன்களைப் பேணுவதுடன் புதிய ஆசிரியர்களை இன்முகத்துடன் வரவேற்பதிலும், இடமாற்றம் பெறும், ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்குப் பிரியாவிடை அளித்துக் கௌரவிப்பதுடன், கல்லூரியின் கல்விசார்புற வேலைகளிலும் அளவிலா ஆர்வத்தைக்காட்டி முன்னின்று உழைத்து வருகின்றது. இவற்றிற்கு ஆதாரமாக இருந்த சென்ற ஆண்டுத் தலைவர் திருமதி V. சற்குணரட்ணம் அவர்களைப் பாராட்டுவதோடு, நடப்பாண்டின் தலைவர் திருமதி M. T. ஞானப்பிரகாசத்திற்கு எமது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

## இன்ரறக்ட் கழகம

1995-ஆம் ஆண்டு தைத்திங்கள் 30-ம் நாள் சட்டப்படி இக் கழகம் தன் அங்குரார்ப்பண வைபவத்தை மிகச் சிறப்பாகக்கொண் டாடியது. சமூகநலனை மேன்மையாகக் கொண்ட இக்கழகம் தனது ஆரம்ப காலத்திலேயே பாடசாலையில் சிறியளவிலான பௌதீக வேலைத்திட்டங்களை மேற்கொண்டு செயற்படுத்தியது. மாணவர் மத்தியில் உலக நடப்புக்களை உடனுக்குடன் தெரியப் படுத்தியும் வருகின்றது. இவர்களுடைய சேவை நாளும் பொழு தும் வளர்ச்சியடைய எனது வாழ்த்துக்கள் இதனைத் திறம்பட இயக்கிவரும் பொறுப்பாசிரியர் திரு. B. ஸ்ரீகந்தவேளுக்கு எனது பாராட்டுகள்

## சூழல் சுற்றுப்புற மாணவர் ஒன்றியம்

இவ்வொன்றியம் நடப்பாண்டின் ஆரம்பத்தில் சம்பிரதாயபூர்வ மாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதில் மாணவர்கள் சுயவிருப் பின் அடிப்படையில் அங்கத்தவர்களாகச் சேர்ந்துள்ளனர். இதன் முக்கிய நோக்கம் கல்லூரியின் உள்ளக, வெளியக சுத்தம் பேணல், கல்லூரி வளாகத்தை அழகாகவும் தூய்மையாகவும் பேணுதல். மிகக் குறுகிய காலத்துக்குள் இவ்வொன்றியம் ஆரம்பித்தாலும் அதன் செயற்பாடுகள் வேகமாக வளர்ந்து வருவது மகிழ்ச்சிக்குரிய தாகும். இவ்வேளையில் அதன் பொறுப்பாசிரியர்களான திரு. A. இளங்கோ, திரு. B. ஸ்ரீகந்தவேள் ஆகியோருக்கு எனது பாராட் டுக்கள்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

இச்சங்கமானது கல்லூரியின் கல்வி சார்ந்த, கல்வி, சுகாதார அபிவிருத்தி முயற்சிகளில் மிகவும் முன்னின்று உழைத்து வருகிறது. இச்சங்கத்தின் அங்கத்தவர்கள் யாவரும் தன்னலம் கருதாது கல் லூரியின் அபிவிருத்திக்காக சேவையாற்றுகின்றமைக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு, தொடர்ந்தும் இச்சேவையினை நல்குவார்கள் என எதிர்பார்க்கின்றேன். கடப்த வருட அசாதாரண நிலையினால் எமது கல்லூரியின் மஸ்கன் மண்டபம், அதிபர் அலு வலகம் என்பன பயன்படுத்த முடியாது போயிற்று. இந்நிலையில் அதிபர் அலுவலகத்தை கல் நார் கூரையிட்டுத் திருத்தி மீண்டும் பாவனைக்கு பயன்படுத்துவதற்கு நிதியுதவி அளித்த பெற்றோர்கள், திரு. தில்லைநாதன் 500-00, திரு. சுந்தரராஜன் 501-00 திரு. எஸ். சண்முகநாதமுதலி 5000-00, திரு. அ. மகாதேவன் 250/_

திரு வி. கே. சிவபுரத்தரசன் 500-00, திருச விஸ்வநாதன் 500 00, திரு பு கருணாகரசிங்கம் 500-00, திரு அ சின்னத்தம்பி 200 00, திரு சு. அருளையா 500-00, திருமதி அ குலஞானமதி 500-00, திரு ந. தணிகாசலம் 250-00 ஆகியோருக்கும், சிறுதொகை மூலமும் உதவிய ஏனையோருக்கும் எனது மனமுவந்த பாராட்டுக்கள். இம்மன்றத்தின் நிதி நிலையான வைப்பில் இடப்பட்டு அதன் வட்டிப் பணம் பரிசளிப்பு விழாவிற்கு வருடந்தோறும் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

## பழைய மாணவிகள் சங்கம்

எமது கல்லூரியின் பல்வேறு அபிவிருத்தித் தேவைகளிலும் முன்னின்று உழைத்துவரும் மற்றுமோர் அமைப்பு பழைய மாணவிகளின் சங்கமாகும். இச்சங்கம் கல்லூரியின் முதுகெலும்பு போன்று சகல துறைகளிலும் நிமிர்ந்து நின்று செயலாற்றி வருவதுடன் கல்லூரிக்கு ஏற்படும் நிதித்தேவைகளிலும் மனமுவந்து உதவி புரிகின்றமைக்கு எமது நன்றி. ஆசிரியர் நலன்புரிக்கழகம், அபிவிருத்திச்சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து இவ்வறிக்கை காலத்தினுள் பல செயற்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ள பெருமை இப்பழைய மாணவிகள் சங்கத்திற்கு உரித்தாகும்.

உயர்தர விஞ்ஞானப்பிரிவு மூடிவிட இருந்த சமயத்தில் கைகொடுத்த தெய்வம் போன்று இச்சங்கமே அதனை முறியடிக்கும் சாதனையை மேற்கொண்டு விஞ்ஞானப்பிரிவை ஸ்திரமடையச் செய்தது. இதற்கு முக்கியகர்த்தாவாக விளங்கியவர் அமரர் சிவா. இராஜேந்திரன் அவர்கள். இன்று அவரது சேவையையும் செயற்பாடுகளையும் அறிவுரைகளையும் இழந்து தவிக்கின்றது. பழைய மாணவிகள் சங்கம் கல்லூரியின் எந்த நிகழ்வானாலும் தன் பங்குண்டு என்பதைச் செயலாலே உணர்த்தி 'முயற்சியுடையோர் இகழ்ச்சி அடையார்' என்னும் முதுரையை மெய்ப்பித்து 'எந்நேர ஒய்விலும் முன்னேற முயல்க' என தனக்கும் சமூகத்திற்கும் நிதமும் தன் நோக்காலும் போக்காலும் உணர்த்தி வந்தவர் அமரர் அவர்கள். அவர்கள் காட்டிய வழி சங்கத்திற்கு என்றென்றும் கைகொடுத்து உதவும்.

இவ்வறிக்கைக் காலப்பகுதியில் கல்லூரிக்கு அவசியம் எனக் கருதப்பட்ட மேசைகள், நாற்காலிகள் இருபதும் ரூபா 35000/- ற்கு கொள்வனவு செய்து கல்லூரிக்கு உதவியுள்ளது.

அமரர் சிவா. இராஜேந்திரன் அவர்களுக்கு நினைவாஞ்சலி செலுத்துமுகமாக திருவுருவப்படத்தை ஊர்வலமாக எடுத்துவந்து

பகிரங்கக் கூட்டம் ஒன்றில் அவரது செயற்பாடுகளை வெளிப் படுத்தி அன்னாரின் இழப்பை நினைவுகூர்ந்து அவரது ஆத்மா சாந்தியடைய சகலரும் பிரார்த்தனை செய்தனர். இவ்வாறு நாளும் பொழுதும் நல்லவற்றைச் செய்து கல்லூரியின் முன்னேற் றத்திற்கு உறுதுணையாக விளங்கும் இச்சங்கத்திற்கு எமது பாராட் டுக்கள். மேலும் ஞாபகார்த்த அன்பளிப்பு வழங்கிய திரு. தில்லை நாதன் அவர்கட்கும் நவாலி விமானத் தாக்குதலில் அகால மரணம டைந்த செல்வி T, பிரதீபா அவர்களின் ஞாபகார்த்தமாக ரூ.5000/- வழங்கிய திரு. தர்மகுலசிங்கம் அவர்களுக்கும் ரூ. 3000/-ஐ பரி சளிப்பு அன்பளிப்பாக வழங்கிய எமது ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி P கதிர்காமநாதன் அவர்கட்கும் எனது நன்றி.

## பழைய மாணவிகள் சங்கம் – கிளை – கொழும்பு

எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் செல்வி ஆறுமுகம் தலை மையில் இயங்கி வரும் இக்கிளைச் சங்கம் கல்லூரியின் வளர்ச்சியி லும் முன்னேற்றத்திலும் அதிக அக்கறை கொண்டு, கல்லூரி மாணவி களின் கல்விக்கு புலமைப் பரிசில் - பரிசில் என்பன வருடாவருடம் வழங்கி ஊக்குவித்து வருகின்றது. மற்றும் வெளிநாடுகளிலும் இதன் கிளைச் சங்கங்களை உருவாக்க ஊக்கமும் சிரத்தையும் எடுத்துள் ளது கனடாவிலிருந்து உதவிக்கரம் நீட்டிய மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினர் ஒருவரின் கடிதம் இதை வெளிக்காட்டி நிற்கிறது. இத்தகைய சிறந்த நோக்கோடு இயங்கும் இச்சங்கங்களுக்கு எமது நன்றியையும் மனமுவந்த பாராட்டுக்கலை யும் தெரிவிக்கின்றோம்.

## தேவைகள்

ஒரு கல்லூரி திறம்பட இயங்குவதற்கு அக்கல்லூரி ஆசிரியர் களே பொறுப்பானவர்கள். இந்த வகையில் இங்கு தடையாக உள் ளது. ஆசிரியர்கள் பற்றாக்குறையாகும். குறிப்பாக தாவரவியல், விலங்கியல், இந்துநாகரிகம், கிறிஸ்தவம், சித்திரம், நடனம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் இன்மையால் நாம் தொண் டர் சேவையை நாடியுள்ளோம். இவ்வாறு மேலதிக ஆசிரியர் சேவை யைப் பெறுவதற்குரிய நிதி வசதி எம்மிடம் இல்லை. இதனை எமது பிரதிக் கல்விப்பணிப்பாளர் கவனத்தில் எடுத்து நல்ல சேவை மனப்பான்மையும், திறமையும் உள்ள ஆசிரியர்களைத் தந்துதவ வேண்டும் என்று தயவாக வேண்டுகிறோம். எமது கல்லூரியின் எழுதுவினைஞர் இடம்பெயர்ந்த காரணத்தினால் நிரந்தர எழுது வினைஞரும் தற்போது இல்லை.

…ற்றும் கல்லூரியை விட்டு விலகும் மாணவிகள் ஏதோ ஒரு வகையிலாவது தமது அறிவினை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கேற்ப நல்ல பயிற்சி நெறிகளை எமது கல்லூரியில் ஆரம்பிக்க உதவ வேண்டும். கடந்த வருட அசாதாரண நிலையினால் எமது கல்லூரியின் மஸ்கன் மண்டபம் பாவிக்க முடியாது உள்ளது. இதனால் இம்மண்டபம் மழையினால் நனைந்தும், வெய்யிலிற் காய்ந்தும் மேலும் பாவிக்க முடியாத நிலைக்கே சென்று விடும்போல் உள்ளது. இதனை கல்வித் திணைக்களம், பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் கவனத்தில் எடுத்து உதவ முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

# நன்றி

கல்லூரி நிர்வாகத்தையும், கடமைகளையும் செவ்வனே நடாத்துவதற்கு எனக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரி மேற்பார்வையிலும், நிர்வாகத்திலும் பெரும்பங்கெடுத்து நிர்வாகத்தைச் செவ்வனே நடத்த உதவிவரும் எனது பிரதி அதிபர் திருமதி வி. சண்முகரட்ணம் அவர்களுக்கு என் இதயம் நிறைந்த நன்றி. திறமை அனுபவம் கொண்டவராய் கல்லூரியின் அனைத்து விடயங்களிலும் தம் ஒத்துழைப்பை வழங்கி வந்த ஓய்வுபெற்ற சிரேஷ்ட ஆசிரியர் திருமதி எம். செல்வரட்ணம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

எனது சுமையைப் பகிர்ந்து அனைத்து நடவடிக்கைகளிலும் பங்கு கொண்டு ஒத்துழைப்பு நல்கிய எனது ஆசிரியர் குழாத்திற்கும் எனது மனப்பூர்வமான நன்றி·

அலுவலக எழுதுவினைஞர், ஏனைய கல்லூரி ஊழியர்களும் ஆற்றிய பணிகளுக்கு எனது நன்றி.

ஞாபகார்த்தப் பரிசுகளைத் தந்துதவிய பெரியோர்களுக்கும் விழாவிற்கு வருகை தந்த பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் ஆகியோருக்கும் எனது மனப்பூர்வமான நன்றி.

இவ்விழாவினைச் சிறப்பிக்க வந்திருக்கும் கௌரவ விருந்தினர்' எமது பிரதிக் கல்விப் பணிப்பாளர் அவர்கட்கும், சிறப்பு விருந்தினர்கட்கும் எல்லாவற்றுக்கும் மேலாக இவ்விழாவிற்குப் பெருமையளித்த பேராசிரியர் வைத்திய கலாநிதி நச்சினார்க்கினியன் அவர்களுக்கும் அவர் தம் பாரியார் அவர்களுக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக பழைய மாணவர், பெற்றோர், நலன் விரும்பிகள், மாணவர், ஆசிரியர், ஊழியர் அனைவரினதும் நன்மதிப்பையும் அவர்களுடன் நல்லதொரு உறவையும் கல்லூரி மலர்வித்துள்ளது, இந்நல்லுறவு மேலும் வளர உழைப்போமாக!

மானிப்பாய் மகளிர் கல்லூரி,
மானிப்பாய்.

திருமதி வி. பசுபதிப்பிள்ளை,
அதிபர்.

ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், யாழ்ப்பாணம்.